18. **விண்ணப்பிக்கும் முறை.**– சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டு இவ்வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் ஆகியவற்றை சான்றுப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022.04.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பணிப்பாளர நாயகம், அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவை வீதி, கொலன்னாவை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் தரம் III இற்கான (திறந்த) ஆட்சேர்ப்பு – 2022" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

19. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் மற்றும் ஒவ்வாமைகள் காணப்படுகின்றது எனக் கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலை சரியானதெனக் கொண்டு செயற்படுத்தல் வேண்டும்.

பொறியியலாளர் கே. பீ. வதுகே,
பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ,
2022, மாச்சு 10.